தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன் கிழமை, 1981 ஜனவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்

திறந்தெரிந்து தேறப் படும்.''

நீதிநெறி, பொருள், இன்பம், உயிருக்காக அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்த பிறகே, ஒருவரை ஒரு பணிக்கு உரியவராகத் தேர்ந்து எடுக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 61, 62 மற்றும் 63 ஆகியவை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் கூடுதல் தண்ணீர் தீர்வை விதிப்பு

*வினா எண் 64.— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் அர்சுனா நதித் திட்டத்தின்கீழ் பயனடையும் கண்மாய்கள் யாவை?

(ஆ) 1979ம் ஆண்டு மேற்படி கண்மாய்களுக்கு தண்ணீர் வராமலிருந்தும் கூடுதல் தண்ணீர் தீர்வை கிராம அதிகாரிகளால் வசூல் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) 1. தாதங்குளம்.

2. சாத்தனேரி

3. நத்தம்பட்டி பெரியகுளம் கண்மாய்

4. கரிசல்குளம்பட்டி கண்மாய்.

5. திருவாங்குளம் கண்மாய்

6. கள்ளிபுத்தூர் கண்மாய்

7. தொண்டைமான்குளம்.

8. கொந்தராயன்குளம்.

(ஆ) 1979-ம் ஆண்டில் மேற்படி கண்மாய்களின் ஆயக்கட்டு நிலங்களுக்கு கூடுதல் தண்ணீர் தீர்வை விதிக்கவும் இல்லை, வசூல் செய்யப்படவும் இல்லை.

மாண்புமிகு திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு அதாவது 1388 ஆவது பசலி ஆண்டில் அர்சுனா நதித்திட்டத்தின்கீழ் உள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் பாயவும் இல்லை; மராமத்து வேலையும் நடக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டதன் பேரில் தண்ணீர் வரி வஜா செய்யப்பட்டது. அப்படியிருந்தும் அந்தக் கிராம அதிகாரிகள் தாலுக்கா கணக்கில் வசூல் செய்து கணக்கு காட்டாமலும், ஏழை, எளிய உழவர்களுக்கு அந்தக் காசை திருப்பிக் கொடுக்காமலும் இருந்துவிட்டனர். ''அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும் பிற்பயக்கும் நற்பாலவை'' என்பது குறள். எனவே, இப்படி முறைகேடாக வசூலித்த அதிகாரிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, தண்ணீர் அந்த ஆண்டில் நிலங்களுக்கு பாயாத காரணத்தினால் தண்ணீர்த் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல அடிப்படை நிலத் தீர்வையையும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது வசூல் செய்திருந்தால் அது தெரிவிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1963-77 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் கூடுதல் நஞ்சைத் தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர் மேல்வரி ஒரு போகம், இருபோகம் ஆகியவைகளுக்கு எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, பாசனத்திற்கு அளிக்கப்படும் தீர்வை விகிதங்கள் பல மாதிரியாக உள்ளதால் அவற்றைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, சீரமைப்பதற்காக ஒரு குழு போடப்பட்டு, அது ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வந்திருக்கிறது. அதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது; விரைவிலே முடிவெடுக்கும்.